**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

தேதி: 25.09.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- அனைத்து பிரிவு மக்களின் நலனுக்காக, முழுமையான சேவை உணர்வுடன் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- கைவினை பொருட்கள் மீதான ஜிஎஸ்டி, கணிசமாக குறைக்கப் பட்டுள்ளதால், கைவினை கலைஞர்கள், வியாபாரிகள் மற்றும் நுகர்வோருக்கு பலன் ஏற்பட்டுள்ளது.

- பாதுகாப்பு உற்பத்தி துறையை அரசு வலுப்படுத்தி வருவதால், இந்தியா, பாதுகாப்பு சந்தையில் உலக சக்தியாகவும், சுயசார்பு நாடாகவும் மேம்பட்டு வருகிறது.

- பாகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று நடைபெற்ற பெண்களுக்கான சுகாதாரத் திருவிழாவில் சுமார் 300 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

மோடி ராஜஸ்தான்

அனைத்து பிரிவு மக்களின் நலனுக்காக, முழுமையான சேவை உணர்வுடன் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். குறிப்பாக, பழங்குடி சமூகத்தினர், கண்ணியம் மற்றும் சுய மரியாதையுடன் வாழ்வதை உறுதிப்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாக, இன்று ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில், பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் கூறினார். இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 1 லட்சத்து 72 ஆயிரம் கோடி ரூபாயாகும்.

மோடி

முன்னதாக, இன்று க்ரேட்டர் நொய்டாவில், உத்திரபிரதேஷ் அரசின் சர்வதேச வர்த்தக கண்காட்சியை பிரதமர் திரு நரேந்திரமோடி. தொடக்கி வைத்து பேசுகையில், நிச்சயமற்ற உலகச் சூழலுக்கு இடையிலும், இந்தியா குறிப்பிடத் தகுந்த அளவில் வளர்ச்சி அடைந்திருப்பதாக கூறினார். உலக அளவில் ஏற்பட்ட தடைகளை இந்தியா தனக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, புதிய திசையில் நடைபோட்டு வருவதாக அவர் தெரிவித்தார். இன்றைய தடைகளே, வரவிருக்கும் ஆண்டுகளில் நாட்டின் அஸ்திவாரத்தை வலுப்படுத்தும் என்றும், சுயசார்பு இந்தியா எனும் மன உறுதியை வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட யுபிஐ போன்ற தொழில் நுட்பங்கள் தற்போது பலருக்கும் பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருவதாக பிரதமர் தெரிவித்தார். ரஷ்ய ஒத்துழைப்புடன் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள ஆலையில் ஏகே-203 ரக துப்பாக்கிகளின் உற்பத்தி விரைவில் தொடங்க இருப்பதை அவர் சுட்டிக் காட்டி, கணிப்பொறி சில்லுகள் வரை எந்த ஒரு பொருளையும் இந்தியாவிலேயே தயாரிக்க முடியும் என்றார். 2047 – ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்னும் இலக்கை எட்டுவதில், தொழில் வர்த்தகத் துறையினர் மற்றும் மக்களுக்கு அரசு துணை நிற்கும் என்று பிரதமர் கூறினார். அண்மையில் அமலுக்கு வந்துள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்களே இதற்கு சான்றாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*ஜிஎஸ்டி சீர்திருத்தம்-கைவினை*

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இம்மாதம் 22 ஆம் தேதி முதல் அமலாகி வரும் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், நாட்டு மக்கள், குறைக்கப்பட்ட வரி விகிதத்தில் பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளை பெற முடிகிறது. முன்பு, 5, 12, 18, மற்றும் 28 சதவிகிதம் என 4 அடுக்குகளாக இருந்த ஜிடிஸ்டி கட்டமைப்பு தற்போது, 5, 18 சதகிகிதம் என 2 அடுக்குகளாக மாற்றப்பட்டுள்ளதால், கைவினை பொருட்கள் உட்பட பல்வேறு

பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி குறைந்துள்ளது. இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி சீர்திருத்தம்-கைவினை*

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், கைவினை பொருட்கள் மீது, கணிசமான வரிக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளதால், கைவினை கலைஞர்கள், வியாபாரிகள் மற்றும் நுகர்வோருக்கு பலன் கிடைக்கிறது. மரம், கல் மற்றும் உலோக சிலைகள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. சமையல் அறை தேவைக்கான மண்பாண்டங்கள், மர வேலைப்பாடுகள், கையால் தயாரிக்கப்பட்ட மெழுகுவர்த்திகள் மற்றும் சித்திரங்களுக்கும், இந்த வரிக் குறைப்பு பொருந்தும். இது போலவே, பருத்தி மற்றும் சணலில் தயாரித்த கைப் பைகள் மற்றும் துணிப் பைகள் மீதான வரியும், 12 சதவிகிதத்தில் இருந்து, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்புகள், பண்டிகை காலத்தில் அமலுக்கு வந்திருப்பதால், குறிப்பாக கைவினை பொருட்களின் விற்பனை அதிகரித்து, கைவினை கலைஞர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், பாரம்பரிய கைவினை தொழில்களை பேணிக் காக்கவும் ஏதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

பாதுகாப்பு ஒப்பந்தம்

இந்திய விமானப் படைக்கு தேவையான, 97 Mk-1A இலகு ரக போர் விமானங்களை மொத்தம் 62 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் வாங்க இந்துஸ்தான் ஏரோ-நாட்டிக்ஸ் நிறுவனத்துடன், பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. HAL நிறுவனம், வரும் 2027-28 ஆம் ஆண்டு முதல் போர் விமானங்களை தயாரித்து வழங்கத் தொடங்கும் என்றும், மொத்தம் 6 ஆண்டுகளுக்குள் இந் நடைமுறை பூர்த்தி ஆகும் என்றும் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. 64 சதவிகித உள்நாட்டு உதிரி பாகங்களுடன் கூடிய இந்த விமானங்களில், கடந்த 2001 ஆம் ஆண்டு ஒப்பந்தத்துடன் ஒப்பிடுகையில், 67 சதவிகித கூடுதல் அம்சங்கள் புதிதாக சேர்க்கப்படும் என்றும், ஸ்வயம் பாதுகாப்பு கவசம், உத்தம் ரேடார் போன்ற உள்நாட்டு தொழில்நுட்ப வசதிகள் இதில் இடம் பெறுவதால், பாதுகாப்புத் துறையில் சுய சார்பு முன் முயற்சிகள் ஊக்கம் பெறும் என்றும், தெரிவிக்கப் பட்டுள்ளது. தேவையான உதிரி பாகங்களின் உற்பத்தியில் 105 இந்திய நிறுவனங்கள் ஈடுபட உள்ளதும், இதனால் ஆண்டுக்கு 11 ஆயிரம் நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் உருவாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

*சேவா சப்தாஹ்- பாதுகாப்பு*

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை-நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. பாதுகாப்பு உற்பத்தி துறையை வலுப்படுத்துவதன் மூலம் உலக அளவிலான பாதுகாப்பு சந்தையில் முக்கிய சக்தியாகவும், சுயசார்பு நாடாகவும் இந்தியாவை மேம்படுத்த, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் குறித்து, இன்று, **சேவைத் திருவிழா** என்னும், இந்த **சிறப்பு தொடரில்** காண்போம். ..........

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- பாதுகாப்பு*

<u>பாதுகாப்பு உற்பத்தி துறையில் சுயசார்பை எட்டும் இலக்கிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் வல்லமை, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது வெளிப்பட்டது. பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் சுயசார்பை எட்டுவது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி பேசுகையில்.......</u>

(வாய்ஸ் -மோடி )

*சேவா சப்தாஹ்- பாதுகாப்பு*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் பதவிக் காலத்தில், இந்தியாவின் வருடாந்திர பாதுகாப்பு உற்பத்தி, முன் எப்போதும் இல்லாத உயர் அளவை எட்டியுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில், இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி, 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி அதிகரித்துள்ளது. இது, 2014-15 ஆம் ஆண்டில் இருந்த அளவுடன் ஒப்பிடுகையில், 3 மடங்கை விட அதிகமாகும். பாதுகாப்பு உற்பத்தியின் வளர்ச்சியில், பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளுமே தொடர்ச்சியான முறையில் முக்கிய பங்களித்து வருகின்றன. இதற்கேற்ப, நீண்ட கால நோக்கிலான கொள்கை மாற்றங்களையும், வர்த்தகம் புரிவதை எளிமையாக்குவதற்கான சீர்திருத்தங்களையும் அரசு அமல்படுத்தி உள்ளது. மேக்-இன்-இண்டியா திட்டத்திலும், தேசிய பாதுகாப்பிற்கு முக்கிய இடம் அளிக்கப்படுவதால், ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை வரை, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் முயற்சிகள் வலுவடைந்துள்ளன.

சரியான கொள்கைகள் மற்றும் உள்நாட்டு அளவிலான புதுமைப் படைப்புகள் மூலம், பாதுகாப்பு உற்பத்தியில் இந்தியாவின் சுயசார்பு அதிகரித்து வருவதால், தேசிய பாதுகாப்பும், உலக அளவில் இந்தியாவின் போட்டித் திறனும் அதிகரித்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதி

அதிகரித்து, சர்வதேச பாதுகாப்பு சந்தையில் முக்கிய சக்தியாகவும் இந்தியா மேம்பட்டு வருகிறது.

*புதுச்சேரி மகளிர் சுகாதாரம்*

ஆரோக்கியமான பெண்கள் – வலுவான குடும்பம் இயக்கத்தின் கீழ், இன்று புதுச்சேரியில், பாகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற பெண்களுக்கான சுகாதாரத் திருவிழாவில் சுமார் 300 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு செந்தில்குமார் இதனை தொடக்கி வைத்தார். சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், கருப்பை வாய் புற்றுநோய் உட்பட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகளும் மருத்துவ ஆலோசனைகளும் இம்முகாமில் வழங்கப் பட்டன. 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும், சிவப்பு அட்டைதாரர்களுக்கு இலவச மருத்துவ காப்பீடு எண், பதிவு செய்து வழங்கப் பட்டது. ஆயுஷ் இயக்குநரகம் சார்பில், ஹோமியோபதி, ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவ ஆலோசனைகளும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

*கிரிக்கெட்*

ஆசிய கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் தொடரில் இன்றிரவு 8 மணிக்கு துபாயில் நடைபெறும் சூப்பர் - 4 போட்டியில், பங்களாதேஷ் -பாகிஸ்தான்

அணிகள் மோத உள்ளன. இந்தியாவிற்கு அடுத்தபடியாக, இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் அணி எது என்பதை, இன்றைய போட்டியின் முடிவுகள் தீர்மானிக்கும். பங்களாதேஷ் அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற சூப்பர் – 4 போட்டியில், இந்தியா, 41 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

*வானிலை*

வடக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்க கடல் பகுதிகளில் அடுத்த 12 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வரும் 27 ஆம் தேதி காலை வாக்கில், தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திர கரையை கடக்க கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி -காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப் படுகிறது. கன்னியாகுமரி, தென்காசி மற்றும் நீலகிரி மாவட்டத்திலும், நெல்லை-கோவை மாவட்ட மலைப் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகப் பட்சமாக மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேட்டில் 6 சென்டி மீட்டர் மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 1 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது.

*ஹைட்ரஜன்*

பெட்ரோலுடன் 20 சதவிகித உயிரி எரிபொருள் கலந்து விற்கும் இலக்கை இந்தியா, ஏற்கனவே எதிர்பார்க்கப் பட்டதை விட, 6 ஆண்டுகள் முன்பாகவே எட்டி இருப்பதாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் உலக ஹைட்ரஜன் இண்டியா மாநாட்டில் உரையாற்றிய அவர், 2030 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் பசுமை எரிபொருள் உற்பத்தி திறனை 5 மில்லியன் டன்னாக உயர்த்தும் இலக்கையும், முன் கூட்டியே எட்ட முடியும் என்றார். இதற்கு ஏதுவாக, இந்திய பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் 1 மில்லியன் டன் உற்பத்தி திறனுடன் கூடிய பசுமை ஹைட்ரஜன் எரிபொருள் உற்பத்தி வசதிகளை நிறுவ, திட்டங்களை அறிவித்து இருப்பதாக அவர் கூறினார். பெரிய அளவிலான உள்நாட்டு தேவைகளும், பரவலான விநியோக வசதிகளும், இணையற்ற பொறியியல் திறன்களும் இணைந்து, ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் உலகின் முன்னனி நாடாக இந்தியாவை மேம்படுத்தும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

அனைத்து பிரிவு மக்களின் நலனுக்காக, முழுமையான சேவை உணர்வுடன் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கைவினை பொருட்கள் மீதான ஜிஎஸ்டி, கணிசமாக குறைக்கப் பட்டுள்ளதால், கைவினை கலைஞர்கள், வியாபாரிகள் மற்றும் நுகர்வோருக்கு பலன் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு உற்பத்தி துறையை அரசு வலுப்படுத்தி வருவதால், இந்தியா, பாதுகாப்பு சந்தையில் உலக சக்தியாகவும், சுயசார்பு நாடாகவும் மேம்பட்டு வருகிறது.

பாகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று நடைபெற்ற பெண்களுக்கான சுகாதாரத் திருவிழாவில் சுமார் 300 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.